# 2019 SLIM NASCO விருது வழங்கும் நிகழ்வில் விருதுகளைப் பெறும் Airtel விற்பனைப் பிரிவு

பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டில் Airtel Lanka தொடர்ச்சியாக மேற்கொண்ட முதலீடுகளின் விளைவாக அண்மையில் நடைபெற்ற 2019ஆம் ஆண்டு SLIM NASCO விருது வழங்கும் நிகழ்வில் தங்கம் மற்றும் வெண்கல விருதுகளை வெல்வதற்கு இரண்டு சிறந்த விற்பனை குழு உறுப்பினர்களுக்கு வழிவகுத்தது. Airtel Lankaவின் சிரேஷ்ட பிராந்திய நிறைவேற்று அதிகாரி Bishrul Suhaib, “Best of the Best” பிரிவின் கீழ் விற்பனை நிறைவேற்று அதிகாரி / தொலைத்தொடர்பு மேற்பார்வையாளருக்கான தங்க விருதினையும், Airtel Lankaவின் பிராந்திய முகாமையாளர் Ishan Malwattage, தொலைத்தொடர்பு பிராந்திய முகாமைத்துவப் பிரிவில் வெண்கல விருதினையும் பெற்றனர்.

விரும்பத்தக்க தொலைத்தொடர்பு வசதிகளை வழங்குநர் என்ற நிலையை உறுதிப்படுத்துவதன் மூலம் Airtel Lanka அதன் அனைத்து ஊழியர்களின் தொழில் வளர்ச்சி வாய்ப்புக்களான கள விற்பனை நிறைவேற்று அதிகாரி (FSE) போன்ற மேம்பாட்டு நடவடிக்கைகளை விரிவுபடுத்தியுள்ளதோடு, இது அண்மை காலங்களில் அங்கீகரிக்கப்பட்ட விற்பனை குழு உறுப்பினர்களின் வெற்றியிலும் முக்கிய பங்கை வகித்துள்ளது.

இதுதொடர்பாக கருத்துதெரிவித்த Airtel Lankaவின் பிரதம நிறைவேற்று அதிகாரி / முகாமைத்துவப் பணிப்பாளர் Jinesh Hegde, “Airtel Lankaவின் மக்கள் மூலோபாய பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டில் குறிப்பிடத்தக்க முதலீடுகள் மூலம் எங்களது ஒவ்வொரு ஊழியரையும் மேம்படுத்துவதற்கு கவனம் செலுத்தப்பட்டது. இந்த ஆண்டின் SLIM NASCO விருது வழங்கும் நிகழ்வில் Suhaib மற்றும் இஷான் ஆகியோர் வென்ற விருதுகளானது, எங்களது அர்ப்பணிப்பிற்கு மக்கள் வழங்கிய சிறந்த பிரதிபலிப்பு என்பதற்கு ஏராளமான சான்றுகளாகும்” என தெரிவித்தார்.

SLIM NASCO நேர்காணல் குழுவின் முன்னிலையில் தங்கள் திறன்களை வெளிப்படுத்திய, Bishrul Suhaib மற்றும் Ishan இருவரும் விற்பனை இலக்குகளை அடைய பயன்படுத்திய புதுமையான மற்றும் பயனர் நட்பு விற்பனைத் தந்திரோபாயங்களை அவர்களிடம் முன்வைத்தனர். நிர்வாகக் கண்ணோட்டத்தில் Bishrul Suhaib தனது அணியை மேம்படுத்துவதற்கும் முன்னெடுத்த நடவடிக்கைகள் குறித்தும், இதன்மூலம் தமது நிறுவனத்தை விரும்பத்தக்க தொலைத்தொடர்பு வசதிகளை வழங்கும் நிறுவனமாக தக்கவைப்பதற்கு அவரது பங்களிப்பை நிரூபித்தார். தேர்ந்தெடுக்கப்பட்ட மதிப்பீட்டு காலக்கட்டத்தில் அவர்களின் செயல்திறன், விற்பனை வழிமுறையில் முன்னேறுவதற்கான அவர்களது சாத்தியம் மற்றும் அவர்களது முக்கிய செயல்திறன், வர்த்தக செயற்பாடுகளின் மூலோபாய மதிப்பு குறித்தும் குழு மேலும் மதிப்பீடு செய்துள்ளது.

குறிப்பாக, Airtelலின் விருதுகளை வென்ற ஊழியர்கள் இருவரும் விநியோகஸ்தர் வலைப்பின்னலின் மூலம் வளர்ந்து வரும் கள விற்பனை நிறைவேற்று அதிகாரிகள் (FSE) குழுவின் ஒரு பகுதி ஊழியராக சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இந்த ஊழியர்கள் நிறுவனத்தின் தொடர்ச்சியான வெற்றி மற்றும் விரைவான வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

கள விற்பனை நிறைவேற்று அதிகாரிகளின் மேம்பாட்டுத் திட்டமானது வாழ்க்கை மற்றும் பணி திறன் அறிவு, முன் முயறச்சிகளையும் உள்ளடக்கியதுடன், அடித்தள திறன்கள், தொழில்நுட்ப பயிற்சி மற்றும் அவர்களின் தொழில், வாழ்க்கையில் முன்னேற அவர்களுக்கு உதவுவதை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது. ஆரம்பத்தில் ஒவ்வொரு கள விற்பனை நிறைவேற்று அதிகாரியும் Airtelஇல் இணையும் போது ஒரு நோக்குநிலை / தூண்டல் பயிற்சி மூலம் ஆரம்பிக்கின்றனர். இது பிராந்திய மட்டங்களில் காலாண்டு பயிற்சிக்கு திறனை வளர்ப்பதற்கும் அவர்களின் தொழில் திறன்களை விரிவுபடுத்துவதற்கும் ஒரு வாய்ப்பாக அமைகிறது.

இலங்கையில் சந்தைப்படுத்தலுக்கான தேசிய அமைப்பாக Sri Lanka Institute of Marketing (SLIM) உள்ளது. இது சந்தைப்படுத்தல் சிறப்பை ஊக்குவித்து 1970ஆம் ஆண்டு முதல் சந்தைப்படுத்தல் நிலையை உயர்த்தியுள்ளது. 2010ஆம் ஆண்டு SLIM ஒருபடி மேலே சென்று NASCO விருது திட்டத்தை அறிமுகம்

செய்தது. இது பலதரப்பட்ட தொழில்களில் விற்பனைப் பணியாளர்களை அங்கீகரிப்பதற்கான விற்பனை சகோதரத்துவத்திற்கான முதன்மை நிகழ்வு என்பதும் குறிப்பிடத்தக்கது.

## Bharti Airtel Lanka வை பற்றி

2009 ஜனவரி 12ஆம் திகதி இலங்கையில் தமது நடவடிக்கைகளை ஆரம்பித்த பாரதி எயார்டெல் (எயார்டெல் லங்கா) நிறுவனம் தற்போது ஒருமில்லியன் வாடிக்கையாளர் மட்டத்தை நெருங்கிய இலங்கையின் வேகமான தகவல் தொலைத்தொடர்பு வலயமாகும். தமது வணிக செயற்பாடுகளை ஆரம்பித்த 2009ஆம் ஆண்டிலிருந்து 3 வருட குறுகிய காலப்பகுதிக்குள் எயார்டெல் நாட்டில் எல்லா பகுதிகளிலும் பரந்து விரிந்த சேவையை வழங்கியதோடு இன்று நாடு முழுவதிலும் தமது சேவையை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இலங்கை முதலீட்டுச் சபையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள எயார்டெல் லங்கா தொலைத்தொடர்பு வலயமைப்பு சேவைகள் மற்றும் நிறுவன ரீதியான தீர்வுகள் உட்பட டிஜிட்டல் தொலைத்தொடர்பு சேவைகள் பலவற்றையும் வழங்குகின்றது. மேலதிக தகவல்களுக்கு www.airtel.lk என்ற இணையத்தளத்தை பார்வையிடவும்.